மேலும், 2025 – 2026 ஆம் கல்வியாண்டில், 110 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கை இடங்கள் 24,309 உள்ளன. இதற்கு மாணாக்கர்கள் விருப்பப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு இன்று (20.06.2025) முதல் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

ஆகஸ்டு 4 முதல் அனைத்து முதுநிலை முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் தொடங்கும். 2025–26 முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கான மாணாக்கர் சேர்க்கை தொடர்பான விவரங்கள் கீழ்குறிப்பிடபட்டுள்ளன.

| முதுநிலைப் பாடப்பிரிவு 2025 – 26 மாணாக்கர் சேர்க்கை தொடர்பான விவரங்கள் | |
|---|---|
| **விண்ணப்பக் கட்டணம்**<br>ஒரு மாணாக்கருக்கு – ரூ.58/–<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/– மட்டும் | SC/ST பிரிவினருக்குப் பதிவுக் கட்டணம் – ரூ.2/– மட்டும், விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை |
| விண்ணப்பம் பதிவுசெய்யத் தொடக்க நாள் | 20.06.2025 (வெள்ளிக்கிழமை) |
| விண்ணப்பம் பதிவுசெய்ய இறுதி நாள் | 15.07.2025 (செவ்வாய்க்கிழமை) |
| மாணாக்கர்களின் தரவரிசைப் பட்டியல் கல்லூரிகளுக்கு அனுப்பப்படும் நாள் | 18.07.2025 (வெள்ளிக்கிழமை) |
| சிறப்பு ஒதுக்கீடு மாணாக்கர்களுக்கான கலந்தாய்வு (மாற்றுத்திறனாளிகள்/ விளையாட்டு வீரர்கள்/ முன்னாள் ராணுவத்தினர்/ தேசிய மாணவர் படை/ பாதுகாப்புப் படைவீரர்கள்) | 25.07.2025 (வெள்ளிக்கிழமை) |
| கலந்தாய்வு நாட்கள் | 28.07.2025 (திங்கள்கிழமை) முதல் |
| முதுநிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடங்கும் நாள் | 04.08.2025 (திங்கள்கிழமை) |

மாணாக்கர்கள் தாங்கள் விருப்பிய பாடப்பிரிவுகளை மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் விண்ணப்பித்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கி கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கல்லூரிக் கல்வித் துறைக்கு தேர்வு செய்யப்பட்ட 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., இராணி மேரி கல்லூரி முதல்வர் முனைவர் பா.உமா மகேஸ்வரி மற்றும் உயர்கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**